உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்

(All Rights Reserved)

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் முன்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்."

மலர் 5. Vol 5. | விக்கிரம ஹு மார்கழி மீ 1உ | டிசம்பர்-1940 | இதழ் 9. No 9.

திருப்புகழ்

திருவேரகம் (சுவாமிமலை)

பாதி மதிநதி போது மணிசடை
நாத ரருளிய குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா
காது மொருவிழி காக முறஅருள்
மாய னரிதிரு மருகோனே
கால னெனையணு காம லுனதிரு
காலில் வழிபட அருள்வாயே
ஆதி அயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு சிறைமீளா
ஆடு மயிலினி லேறி யமரர்கள்
சூழ வரவரு மிளையோனே
சூத மிகவளர் சோலை மருவுசு
வாமி மலைதனி லுறைவோனே
சூர னுடலற வாரி சுவறிட
வேலை விடவல பெருமாளே.

பதவுரை:

பாதி மதி - பிறைச்சந்திரனையும், நதி - கங்கா நதியையும், போதும் - கொன்றை முதலிய மலர்களையும், அணி சடை - தரித்துக் கொண்டுள்ள சடைமுடியை யுடைய, நாதர் அருளிய - தனிப்பெருந் தலைவராகிய சிவபெருமான் பெற்றருளிய குமர - குமாரக் கடவுளே! ஈசா - முழுமுதற் கடவுளே! பாகு கனி மொழி - கற்கண்டின் பாகையும் பழச்சுவையையும் ஒத்த திருமொழியை யுடைய, மாது குறமகள் - பெண்ணமுதமாகிய வள்ளியம்மையாருடைய, பாதம் வருடிய - திருவடியைப் பிடித்து வணங்கிய, மணவாளா - கணவரே! காதம் - கொல்லுதற்குத் துணிந்தும் (அடைக்கலம் புகுந்ததால்) ஒருவிழி காகம் உற - ஒரு விழியைக் காகவடிவுற்ற காகாசுரனுக்குத் தந்து, அருள் - அருள் புரிந்த, மாயன் - மாயாவிநோதரும், அரி - பாவங்களைப் போக்குபவருமாகிய நாராயணமூர்த்தியினுடைய, மருகோனே - திருமருகரே! ஆதி அயன் ஒடு - படைத்தற்றொழிலுக்கு முதல்வராகிய நான்முகக் கடவுளுடன், தேவர் - ஏனைய தேவர்களும், சுரர் உலகு ஆளும்வகை - தேவலோகத்தைப் பண்டுபோல் அரசு செலுத்தி ஆளுமாறு, உறுசிறை மீளா - சூரபன்மனால் உற்ற சிறையைமீட்டு, ஆடுமயிலினில் ஏறி - (ஓங்கார வடிவுடன்) ஆடுகின்ற மயில்வாகனத்தில் எழுந்தருளி, அமரர்கள் சூழ வர வரும் - தேவகூட்டங்கள் சூழ்ந்துவரப் பவனிவந்த இளையோனே - என்றுமகலாத இளமையை யுடையவரே! சூதம் மிகவளர் சோலை மருவு - மாமரங்கள் மிகவும் வளம்பெற்று வளர்கின்ற சோலைகள் சூழ்ந்துள்ள, சுவாமி மலைதனில் உறைவோனே - சுவாமிமலை யென்னுந் திருத்தலத்தில் வாழ்கின்றவரே! சூரன் உடல் அற - சூரபன்மனுடைய வச்சிரயாக்கை பிளவுபட்டழியவும், வாரி சுவறிட - கடல் வற்றிப் போகவும், வேலை விட வல - வேற்படையை விட்டருளிய போராற்றலுடைய, பெருமாளே - பெருமையின் மிக்கவரே! காலன் எனை அணுகாமல் - இயமன் அடியேனைப் பற்றும் பொருட்டு வந்து நெருங்காவகை, உனது இருகாலில் வழிபட - தேவரீருடைய திருவடிக் கமலங்கள் இரண்டினையும் வழிபட்டு உய்யுமாறு, அருள் வாயே - திருவருள் புரிவீர்.

பொழிப்புரை:

பிறைச்சந்திரனையும், கங்கா நதியையும், மலர்களையும் கருணையுடன்) சூடிக்கொண்டுள்ள சடைமுடியை யுடையவரும் எப்பொருட்குந் தலைவரும் ஆகிய சிவபெருமான் பெற்றருளிய

திருச்குமாரரே! தனிப்பெருந் தலைவரே! கற்கண்டின் பாகினை யும் கனிரசத்தையு மொத்த இனிய மொழியையுடைய வள்ளி நாயகியாரது திருவடியைப் பிடித்து வணங்கிய கணவரே! சொல்லுதற்கு என்று கணைவிட்டும், அடைக்கலம் புகுந்ததனால், ஒரு கண்ணைக் கொடுத்துக் காகத்திற்கு அருள் புரிந்தவரும், மாயாவல்லபரும், பாவநாசகரு மாகிய நாராயணமூர்த்தியி னுடைய மருகரே! படைப்புத் தொழிலுக்கு முதல்வராகிய நான்முகக் கடவுளுடன் ஏனைய தேவர்களும், தங்கள் தங்கள் உலகங்களைப் பண்டுபோல் அரசு செலுத்தி ஆளும்படி, அவர்கட் குற்ற சிறையை நீக்கி மீட்டு, (தாள ஒத்துத்துக்கிசைய) ஆடு கின்ற மயிற்பரியின் மீது எழுந்தருளி, தேவர்குழாங்கள் சூழ்ந்து வர பவனி வந்த என்றுமகலா இளமையுடையவரே! மாமரங்கள் வளம்பெற மிகவும் வளர்ந்துள்ள குளிர்ந்த சோலைகள் பல சூழ்ந்து விளங்கும் சுவாமிமலையின் மீது உறைகின்றவரே! சூர பன்மனுடைய வச்சிரயாக்கை பிளவுபட்டழியவும், கடல் வற்ற வும், வேற்படையை விட்டருளிய வல்லபத்தை யுடைய பெரு மித மிக்கவரே! கூற்றுவன் அடியேனிடம் அணுகாவகை, உமது திருவடித்தாமரைகள் இரண்டையும் வழிபட்டு உய்யுமாறு அருள்புரிவீர்.

விரிவுரை:

பாதிமதி:---

தக்கன் கொடுத்த சாபத்தால் தேய்ந்து ஒளி மழுங்கிய சந் திரன் உள்ளம் நடுங்கி, வேறு புகலிடமின்றி சிவபெருமானிடம் சரண்புகுந்தான். பரமகாருண்யராகிய பரமேசுவரர் அவனு டைய குருதாரகமனம் முதலிய குற்றங்களை நினையாதவராய் கருணை கொண்டு, குறைமதியைத் தமது தலையிற் சூடிக் கொண்டு காத்தருளினர்.

"பித்தா பிறைசூடி பெருமானே யருளாளா"
"தூவெண் மதிசூடி"

என்ற தமிழ் வேதங்களின் அருமைப் பாட்டை யுன்னுக.

"எம்பெருமானே! அறியாமையும், பசுத்தன்மையும், களங்கமும், கோணல் தன்மையும் உடைய சந்திரனை முடியில் சூடிக் கொண்டிருக்கின்றீர். அக்குற்றங்கள் அடியேனிடத்தில் ஒன்று கூட இல்லை; இருந்தால் சந்திரனைப் போல அடியேனும் உமது சென்னிக்கு ஒரு அணிகலனாவேன்" என்று சங்கரர் அழகாகக் கூறியிருப்பது மகிழ்ச்சியை விளைவிக்கின்றது.

"ஜடதா பசுதா களங்கிதா குடில
சாத் வஞ்ச நாஸ்தி மயிதேவ
அஸ்தியதி ராஜ மௌளே
பவதா பரணஸ்ய நாஸ்மிகிம் பாத்ரம்"

நாதர் அருளிய குமரேசா:---

நாதர்-தலைவர். உலகெலா முணர்ந்தோதற் கரிய ஒரு பெருங் கடவுள் சிவபெருமான் ஒருவரே யாகலான், அவரே தனிப் பெருந் தலைவர். சிவமூர்த்தி, குற்றம் பொருந்திய சந்திரனைக் குணமாகக் கொண்டும், அடங்காது உலகினை யழிப்பேனென வந்த கங்கா நதியை சடையில் அடக்கியும் அருளிய திறங்களை யுன்னுங்கால், அவரது அளப்பற்ற அருட்குணத்தையும், வரம்பற்ற ஆற்றலையும் உணர்த்துகின்றன. அத்தகைய பெருந்தகையாரது புதல்வராதலால், முருகப் பெருமானும் அத்தகைய ரென்பது போதரும்.

பாகு கனிமொழி மாது குறமகள்:---

வள்ளியம்மையார் பாகும் கனிரசமும் நாணுமாறு இனிமையாகப் பேசுவர்; சிந்தைக்கும் செவிக்கும் இன்பம் பயக்கு மொழிக்கு மொழி தித்திப்பாக அம்மையார் பேசுவதால் அவருடைய சொல்லைக் கேட்க விரும்பி முருகப் பெருமான் வாயூறி நின்றார்.

"தேனென்று பாகென்றுவமிக் கொணாமொழித் தெய்வவள்ளி"
—அலங்காரம்

"கூனேறு மதிநுதற் தெய்வக் குறப்பெண்
குறிப்பறிந் தருகணைந்தன்

குற்றேவல் செய்யக் கடைக்கண் பணிக்கெனக்
குறையிரந் தவள் தொண்டைவாய்த்
தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன்
செங்கீரை யாடி யருளே
செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாள
செங்கீரை யாடி யருளே"

—குமரகுருபரர்

காது மொருவிழி காகமுறஅருள் மாயன்:---

காகத்திற்குக் கண்ணளித்த வரலாறு.

ஸ்ரீ ரகுராமர் சீதையுடனும், இலக்குவருடனும் கானகம் புகுந்து, சித்திரகூட மலையிலே, வடகிழக்குப் பாதத்திலே, மந்தாகினி நதிக்கு அருகில் உறைந்து வருவாராயினர். அங்கு பழங்களும் கிழங்குகளும் நீரும் நிறைந்திருந்தன; சித்தர் பலர் ஆங்கு தவஞ் செய்து கொண்டிருந்தார்கள். பலவகை மலர்கள் நிறைந்து நறுமணங் கமழ்ந்து கொண்டிருந்தது. குயில்கள் கூவ மயில்கள் ஆட வண்டுகள் பாட அவ்விடம் மனத்திற்கு இனிமையைத் தந்து கண்ணுக்கு நல்விருந்து நல்கிக் கொண்டிருந்தது.

ஒரு நாள் இராமர் சற்று இளைப்புடன் சீதையின் மடியின் மீது தலைவைத்து இனிது கண் துயின்றார். சீதை சித்திரப் பதுமை போல் அசைவற்று இருந்தார். அவ்வழியிற் சென்ற இந்திரகுமாரனாகிய சயந்தன் சீதாதேவியைக் கண்டு காமுற்றான். காமத்தால் அவன் அறிவுக் கண்கெட்டது. எப்படியாவது முயன்று அம்மையாரது திருமேனியைத் தீண்டிவிட வேண்டுமென எண்ணினான். எண்ணினவன் காகவுருவெடுத்தான். அம்மையாரது தனங்கள் புண்படுமாறு பலமுறை குத்தினான். தனங்கள் கிழிந்து உதிரம் பெருகி இராமர் முகத்தில் சிந்தியது. நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த இராமர் கண்விழித் தெழுந்தார். "சீதா! உன் தனங்கள் கிழிந்து இரத்தம் வடிவதற்குக் காரணம் என்னை? "என்று வினவினர். சீதை, "இராகவரே! அதோ அந்தக் கிளையில் இருக்குங் காக்கை பலமுறைக் குத்தி என்னைத் துன்புறுத்தியது" என்றார். இராமர் "ஏன் என்னை அப்பொழுதே எழுப்பாமலிருந்தாய்?" என்றார். சீதை, "தாங்கள் அயர்ந்து உறங்கும்

போது உங்கள் உறக்கத்திற்குத் தடைசெய்யக் கூடாதென்று பொறுத்துக் கொண்டிருந்தேன்'' என்றார்.

இராமர் உடனே திருக்கண் சிவந்து, தாம் படுத்திருந்த தருப்பைப் பாயலிலிருந்து ஒரு புல்லை எடுத்து, இக்காகத்தைக் "காதும்" (கொல்லும்) என்று விட்டார். "வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்" என்றபடி அப்புல் அத்திரமாகி காகத்தை விரட்டியது. காகவுருக்கொண்ட சயந்தன் பயந்து, எண்டிசையும் ஓடி ஓடி ஒளிர்ந்தான். இராமபாணம் சென்ற இடமெல்லாம் தொடர்ந்து சென்றது. முடிவில் அவன் கூற்றுவனிடம் அபயம் புகுந்தான். கூற்றுவன் இராமபாணத்தைக் கண்டு அஞ்சி அவனை விரட்டிவிட்டான். இந்திரனிடமும், நான்முகக் கடவுளிடமும் சென்று முறையிட்டான் அவர்களும் அஞ்சி விரட்டினார்கள். முடிவில் சிவபிரானிடம் ஓடினான். சிவமூர்த்தி, "குற்றம் எங்கு செய்தனையோ அங்கனமே மன்னிப்புக் கேட்டுக் கொள்; இராமர் காப்பாற்றுவர்'' என்று கூற, காகம் ஓடி வந்து சித்திர கூடத்தில் உள்ள சீதாபதியினுடைய தாள்களில் விழுந்து "இராமா அபயம்; இரகுவீரா அபயம்; தாசரதே அபயம் காத்தருள்வீர்'' என்று அலறியது. உடனே இராமர் தண்ணருள் செய்து, "காகமே! கலங்கற்க. தஞ்சமென்றவரைக் காப்பது எங்கள் குல நெறி. நின் உயிரைக் கொடுத்தேன். பிறன் மனைவியைத் தீய எண்ணத்துடன் காண்பது பெருந்தவறு. நீ சீதையைத் தீமையோடு பார்த்தனை. அங்ஙனம் பார்த்த கண்களில் ஒன்று நமது கணைக்கு இலக்கு ஆகுக. இன்று முதல் நின் குலத்தோர்க்கு ஒரு கண்ணாகவே இருக்குக. "என்று ஒரு கண்ணைக் கொடுத்து" அருள் புரிந்தார்.

> சித்திரகூடத்திருப்பச் சிறுகாக்கை முலைதீண்ட
> அத்திரமே கொண்டெறிய அனைத்துலகுந் திரிந்தோடி
> வித்தகனே இராமாவோ நின்னபய மென்றழைப்ப
> அத்திரமே யதன்கண்ணை யறுத்ததுமோ ரடையாளம்
>
> —பெரியாழ்வார்

மன்னிக்க முடியாத குற்றத்தைப் புரிந்த காகத்தையும் காத்த கருணைவள்ளலாகிய திருமாலினுடைய மருகராதலால்,

அடியேன் புரிந்த குற்றங்களையும் மன்னிக்க வேண்டும் என்பது குறிப்பு.

காலனெனையணுகாமல்......அருள்வாயே:---

"சந்திரனைத் தக்க சாபமும், காகத்தை இராமபாணமும் விரட்டித் துன்புறுத்தியது போல் அடியேனைக் காலன் துன்புறுத்த வருகின்றான். அங்ஙனம் அக்காலன் வந்து என்னை யணுகா வண்ணம் உமது திருவடித் தொழும்பனாக ஆக்கிக் கொள்வீர்" என்று சுவாமிகள் முறையிடுகின்றார். முருகனடியாரிடம் காலன் அணுகுவதில்லை என்பது தேற்றம்.

வேலா யுதன்சங்கு சக்ரா யுதன்விரிஞ் சன்னறியாச்
சூலா யுதன்தந்த கந்தச் சுவாமி சுடர்க்குடுமிக்
காலா யுதக்கொடி யோனரு ளாய கவசமுண்டென்
பாலா யுதம்வரு மோயம னோடு பகைக்கினுமே.

—அலங்காரம்

ஆதியயனொடு..........சிறைமீளா:---

பிரமதேவர்களுக்கு சூரபன்மன் இட்ட சிறையை எம்பெருமான் நீக்கிய அரும்பெரும் வரலாற்றை அம்முதல்வன் புராணத்தால் கண்டு மகிழ்க.

"அரியரி பிரமாதியர்கால் விலங்கவிழ்க்கும் பெருமாளே"

கருத்துரை:

சிவபுதல்வரே! வள்ளிமணவாளரே! திருமால் மருகரே! தேவர் சிறைமீட்டு மயில்மிசை வரும் இளம் பூரணரே! சுவாமிமலையில் வாழ்பவரே! சூரனும் கடலும் அழிய வேல்விட்டவரே! இயமபயமுண்டாகவா வண்ணம் உமது திருவடித் தொழும்பைத் தருவீர்.

உ

ஓம் குஹாய நம:

கந்தரலங்காரம்

(176-வது பக்கத் தொடர்ச்சி)

(22) மொய்தா ரணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதா ரையுமங்கு வாழவைப் போன்வெய்ய வாரணம்போற்
கைதா னிருப துடையான் தலைபத்துங் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள் பயந்த இலஞ்சியமே.

பதவுரை.

மொய் - வண்டுகளுடன் கூடிய, தார் அணி குழல் - பூமாலைகளைச் சூடிக்கொண்டுள்ள கூந்தலையுடைய, வள்ளியை - வள்ளியம்மையை, வேட்டவன் - மணஞ்செய்து கொண்டவரும், வெய்ய வாரணம் போல் - கொடிய மதயானைபோன்ற, கைதான் இருபது உடையான் - இருபது கரங்களையுடைய இராவணனது, தலைபத்தும் கத்தரிக்க - பத்துத் தலைகளும் வெட்டுண்டு விழ, எய்தான் - கணைவிட்டருளிய திருமாலினது, மருகன் - திருமருகரும், உமையாள் பயந்த - உமாதேவியார் பெற்றருளிய, இலஞ்சியம் - சரவணபவரும் ஆகிய முருகப் பெருமான், முத்தமிழால் - மூன்று வகையான செந்தமிழைக் கொண்டு, வைதாரையும் - வசை சொல்லியவரையும், அங்கு - அவ்விடத்திலேயே, வாழவைப்போன் - இன்ப வாழ்வில் இனிது இருக்குமாறு அருள் புரிபவராகும்.

விரிவுரை:

மொய்தார்.........வேட்டவன்: —

செந்தமிழ் நாட்டில் தமிழ் பேசுவார் குலத்தில் திருவவதாரஞ் செய்த எம்பிராட்டியாராகிய வள்ளியம்மையை மணந்தவர் என்பதனாலும், முருகன் செந்தமிழ்ப் பிரியன் என்பது தெளிவாகின்றது.

"தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன்"
—குமரகுருபரர்

முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போன்:---

செந்தில்வாழ் செந்தமிழ்க் கடவுளாகிய செவ்வேட் பரமன், தமிழ்த் தெய்வம்; தமிழ் விருப்பர்; தமிழ் மாலையர் என்பன பலப்பல அரிய கருத்துக்களை நமது திருப்புகழமிர்தத்தில் "இராவ்சாகேப்" உயர்திரு வ. சு. செங்கல்வராயப்பிள்ளையவர்கள் எழுதியுள்ள, "முருகரும் தமிழும்" என்ற கட்டுரையைத் தொடர்ந்து படித்துணர்க.

நக்கீரர், பொய்யாமொழி, அருணைநாதர், சிதம்பர அடிகள், குமரகுருபரர், இராமலிங்க அடிகள், பாம்பனடிகள் முதலிய அடியார்கள் துதி செய்து அருள் பெற்றனரே யன்றி, வைது அருள்பெற்றிலரே? அங்ஙனம் பெற்றவர் யாவர்? எனின், கூறுதும்.

அப்பன் இரந்துண்ணி ஆத்தாள் மலைநீலி
ஒப்பறிய மாமன் உறிதிருடி - சப்பைக்கால்
அண்ணன் பெருவயிறன் ஆறுமுகத் தானுக்கிங்
கெண்ணும் பெருமை யிலை.

மருவிருக்கும் வேளூரின் வயித்திமகன் குறமகளை மணந்தானென்றே
உருகியான் நஞ்சுண்டான் உமையவளும் தவம்புரிந்தாள் உயர்மான் மேனி
கருகிமுகம் மண்தின்றான் கமலன்முகம் நாலானான் கடவுளோர்கள்
இருவிழியும் இமையாமல் இரவு பகல் உறங்காமல் இருக்கின்றாரே.

(இப்பாடல் தற்குறிப் பேற்றணி)

என்று பாடிய தமிழ்ப் புலவருக்கும் அருள் புரிந்தார். அருணகிரிநாதரும்.

"சேணுயிடு மிதண்மே லரிவையை
மேவியேமயல் கோளலி லைகள் செய்து
சேர நாடிய திருடா"

என்று வைது அருள் பெற்றதைக் காண்க.

முத்தமிழாவன:--- இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ். வைதாரையும் என்ற எச்ச உம்மையால், வாழ்த்தினவரை இயல்

பாகவே வாழவைப்பார் என்பது தெளிவாகின்றது. "அங்கு" என்ற பதம் மிக அருமையானது. ஒருவனை ஒருவன் வையப் பட்ட இடத்தில் மிக்க சீற்றம் எழும். நங் கந்தவேளுக்கு எங்கே தமிழால் வைவார்களோ அவர்களை அங்கேயே வாழவைப்பா ராம். என்ன அருமை? என்ன அருள்? அப்பனுக்குத் தமிழி னுள்ள ஆர்வந்தான் என்னே?

கந்தவேளுக்குந் தந்தையாகிய அந்திவண்ணரும் அங் ஙனமே தமிழ் வேட்கையராவர். மதுரையில் நாற்பத் தொன்பது புலவரில் தாமொருவராயிருந்து தமிழாராய்ந்ததும், மதுர வாசகமாகிய திருவாசகங் கேட்கும் பொருட்டு மண் சுமந்து அடி பட்டதும், இரவில் ஒருகாலன்று இருகால் பரவை வீட்டிற்குத் தம் வேதங்காணாத வித்தகத் திருவடி சிவக்கத் தூது சென்ற தும் இத் தமிழின் பொருட்டன்றோ?

"பித்தா" என்று வைத சுந்தரருக்கு ஐராவணமனுப்பிய அருட்டகைமையை உன்னுந்தோறும் உள்ளத்தில் உவகை ஊற்றெடுக்கின்றதே.

இந்திரன் மால் பிரம னெழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ள வென்னை மத்தயானை யருள்புரிந்து
மந்திர மாமுனிவ ரிவனாரென எம்பெருமான்
நந்தம ரூர னென்றான் நொடித்தான் மலையுத்தமனே.
—சுந்தரர் தேவாரம்

"பித்தனென் றொருகால் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்"
—திருவிசைப்பா

முருகப் பெருமான் தமிழால் வைதாலும் வாழவைப்பா ரென்று விளங்குவதால், வாழ்த்தினர்க்கு அவர் அத்தகைய அருள் புரிவார் என்பது கூறுதற்பாலதோ அப்பரமபதத்தை அடை யும் நெறிகளில் தலைசிறந்தது, அரிய பெரிய தமிழால் அவரை வாழ்த்தி வணங்குதலாம்.

"கனத்த செந்தமிழால் நினையேதினம்
நினைக்கவுந் தருவாய்"
"வண்டமிழ் விநோதம் அருள்வாயே"

என்று சுவாமிகளே பிற இடத்தில் விண்ணப்பிக்குமாறு காண்க. அன்பர்கள் தமிழால் அவரைத் துதித்து இகபர நலன்களை எளிதிற் பெறுவார்களாக.

இலஞ்சியமே:---

இலஞ்சி - குளம். சரவணப் பொய்கையில் வெளிப்பட்டவர்; இலஞ்சி என்ற திருத்தலத்தில் வாழ்பவர் என்று கூறினும் அமையும்.

இப்பாடலுக்கு முருகனை முன்னிலைப் படுத்தியும்
பொருள் கூறலாம்.

கருத்துரை:

வள்ளி கணவரும், மால் மருகரும், உமாசுதருமாகிய முருகவேள் முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழ வைப்பார். ஆதலால் தமிழால் அவரை வாழ்த்தி உய்வுபெறுவீர்கள்.



ஓம் குஹாய நம:

சிவாநந்தலஹரீ

(177-வது பக்கத் தொடர்ச்சி)

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது)

(69) ஜலதாப சுதா களங்கிதா
குடில சாத்வஞ்ச நாஸ்த்தி மயிதே4வ
அஸ்தி3 யதி ராஜ மௌலே
ப4வதா3ப4 ரணஸ்ய நாஸ்மி கி பாத்ரம்.

பதவுரை.

தேவ	- ஓ தேவனே
ஜலதா	- மூடத்தன்மையும்
பசுதாம்	- அறிவில்லாம லிருத்தலும்
களங்கிதா	- (குருபத்னி கமனத்தால்) களங்க முடையவனும்
குடில சாத்வஞ்ச	- கோணலாய் சஞ்சரிப்பவனு யிருத்தலும்
அஸ்த்தி	- இருக்கிற
ராஜமௌலே	- சந்திரனை சிரசில் தரித்திருக்கிறாய்
மயி	- அடியேனிடத்தில்
அஸ்த்தியதி	- இருந்தால்
பவதா பரணஸ்ய	- தங்களுடைய திரு ஆபரணத்திற்கு
பாத்ரம்	- பாத்திரமாக
நாஸ்மிகிம்	- ஆகமாட்டேனோ? ஆகுவேன்.

பொழிப்புரை:

எம்பெருமானே!

மூடத்தன்மையும், அறிவில்லாம லிருத்தலும், களங்கமும், கோணலும், சந்திரனிடத்தில் இருக்கின்றது. அப்படிப்பட்ட, சந்திரனை சிரசில் தரித்திருக்கிறாய் என்னிடத்தில் அந்தக் குற்றங்கள் ஒன்றும் இல்லை. இருந்தால், அடியேனும் தங்களுக்கு பூஷணமாவதற்கு பாத்திரனாக மாட்டேனோ?

ஓம் குஹாய நம:

கந்தர் திருவிளையாடல்

(182-வது பக்கத் தொடர்ச்சி.)

பானுகோபன், காலையில், காலைக்கடன்களை முடித்து, தனது பாட்டியாகிய மாயையை நினைந்தான். அவள் தோன்றி நின்றாள். பானுகோபன் தொழுது, நிகழ்ந்ததைக் கூறி தனக்கு வெற்றி யுண்டாகும் வழியை வினவினான். மாயை, "பானுகோபனே! தருமநெறி நின்று விலகி பழிபூண்டனை; தேவரையும் மூவரையும் பகைத்து எங்ஙனம் வாழ்வாய்; இப்போது நினக்கு வேண்டுவது யாது?" என்ன, பானுகோபன் "இன்று பகைவரை வெல்லும் படையைத் தருதி யென்றான்." மாயை, ஒரு மாயப்படைக் கலத்தை யுண்டாக்கித் தந்து நீங்கினாள். பானுகோபன் மகிழ்ந்து போர்க்கோலங்கொண்டு, தெய்வப் படைக்கலங்களை எடுத்துக் கொண்டு தேரூர்ந்து புறப்பட்டான். 40,000-ம் வெள்ளம் சேனைகள் உடன் சென்றன. பானுகோபன் ஆணைப்படி ஒரு ஒற்றன் வீரவாகுதேவரிடம் வந்து, "உன் உயிரைக் கவரும் பொருட்டு பானுகோபன் வருகின்றான்; புறப்படு" என்றான். வீரவாகுதேவர் துணைவர் சூழ முருகக் கடவுளை வணங்கி நின்றார். முழுதொருங் குணர்ந்த முதல்வன், "முன்னைநாள் போலப் போர் செய்குதி; பானுகோபன் முதலியோரை வெல்லுதி; மாயையைச் செய்தால் நம் வேல் வந்து துணைசெய்யும்" என்று விடை தந்தருளினார். வீரவாகு தேவர் ஆயிரம் வெள்ளம் பூதர்களும் துணைவரும் சூழ செருக்களம் வந்தார். பூதரும் அசுரரும் பொருதனர். பூதர் சிலரும் அவுணர் பலரும் மடிந்தனர். இலக்கத்தெண்மரும் சாமழை சிந்தி அவுணக் கடல்களைக் கலக்கினார்கள். பானுகோபன் சினந்து தேரைச் செலுத்திக்கொண்டு வந்தான்.

வீரவாகுதேவர் அவனை எதிர்த்து அண்டங்கள் நடுங்க நாணொலி செய்து கணைகளைச் சிந்தினர். பானுகோபனும் கணை

பொழிந்து தடுத்து மீண்டும் பல கணைகளை விட்டான்; ஆயிரம் கணை வீரவாகுதேவர் மார்பில் எய்தான். வீரவாகுதேவர் சினந்து ஆயிரங்கணைகளை யேவி அவன் தேரையும் குதிரையும் அழித்து, மீண்டும் ஆயிரங் கணைகளால் அவன் மார்பைப் பிளந்தார். பானுகோபன் தளர்ந்தான். பூதர் ஆர்த்தனர். பானுகோபன் வருணப்படையை விடுத்தான். அது ஊழிகாலத்துக் கடல் வெள்ளம் போல் பரந்து வர தேவர் நடுங்கினர். பூதரும் துணைவரும் கலங்கினர். வீரவாகுதேவர் அக்கினிப் படையால் அதை மாற்றினர். அவ்வக்கினிப்படை உலக மெல்லாம் எரிய வந்தது. பானுகோபன் வாயுப்படையை விட்டான். அது உகாந்த மாருதம் போல் சீறி அனற்படையை யழித்து வந்தது. வீரவாகுதேவர் நாகப்படையை விடுத்தார். அது வாயுவையுண்டுவர பானுகோபன் கருடப்படையை விடுத்தான். நாகப்படை யழிந்தது. வீரவாகுதேவர் நந்திப்படையை ஏவினர். கருடப்படை யழிந்தது. பானுகோபன் இயமப்படையை விடுத்தான். நந்திப் படை அதனையும் அழித்தது. பானுகோபன் பிரமப்படையை ஏவினன். அது சீறி வந்து நந்திப் படையைக் கண்டு வணங்கி நீங்கியது. பானுகோபன் விட்டுணுப் படையை ஏவினன். அது நந்திப் படையுடன் போராடியது. வீரவாகுதேவர் வீரபத்திரப் படையை யேவினர். அதனால் விட்டுணுப்படை தொலைந்தது. அது கண்ட பானுகோபன் சிவப்படையை வழிபட்டு விடுத்தான். வீரவாகுதேவர் தாமும் அப்படையை வழிபட்டு விடுத்தார். இரு சிவப்படைக்கலங்களும் ஊழிக்காற்றையும், தீயையும், நஞ்சையும், நீரையும், பூத வைரவ காளிமாயை காலர் கூட்டங்களையும் உண்டாக்கிக் கொண்டு எங்கும் போர் செய்தன. உருத்திர கணங்களும் பலர் தோன்றிப் பொருதனர். பலபடைகள் சொரிந்தன. மேருமலை தகளாயினது; கடல் வற்றியது; உடுக்கள் உதிர்ந்தன; உயிர்கள் உலைந்தன; குலமலைகள் குலைந்தன; சுரரும் தவரும் ஓடி ஒளிந்தனர். பானுகோபனுடன் வந்த சேனைகள் யாவும் அழிந்தது. பானுகோபன் ஒருவனே பிழைத்தான். அண்டங்கள் பிளந்தன. இதனை யறிந்து சூரனும் கலங்கினன். இருபடைகளும் தமது வலியைச் சுருக்கிக் கொண்டு, தம்மால் அழிந்த மலைகடல் முதலியவற்றை முன்போல் நிலைநிறுத்தி தம்மைச் செலுத்திய இருவரிடம் மீண்டு போயின.

தனித்து நின்ற பானுகோபன் அஞ்சி மறைந்து வானில் நின்றான். தோற்றோடிய பானுகோபனைக் கண்டு வீரவாகுதேவர் புன்முறுவல் பூத்து முருகவேளைத் தெரிசிக்க எண்ணினார். பானுகோபன் இன்றும் நாம் தோற்றோடினால் அடியோடு நம் புகழ் அழியும்; தந்திரத்தால் வெல்லவேண்டுமென் றெண்ணி, மாயப்படையை வழிபட்டு, "நீ ஒருவரும் அறியாவண்ணம் சென்று பகைவரை உயிரையும் உணர்வையும் கெடுத்து நன்னீர்க் கடலில் எறிவாய்" என்று சொல்லி விடுத்தான். அப்படை யாவரும் அறியாவகைவந்து இலக்கத் தொன்பதின்மரையும் ஆயிர வெள்ளம் பூத சேனைகளையும் அறிவை மயக்கி, உயிரைக் கவரும் ஆற்றலின்றி, ஊழிக்காற்றின் வடிவெடுத்து ஆலகாலவிடம் போல்பரந்து, ஆறு கடல்களையுங் கடந்து நன்னீர்க் கடலில் இட்டு பிரியாமல் உடனிருந்தது. பானுகோபன் அதனைக் கண்டு மகிழ்ந்து, பிதாவிடம் போய்ப் பணிந்து, "நான் இன்று பலவாறு போராடி, வீரவாகுவையையும் இலக்கத் தெண்மரையும் ஆயிர வெள்ளம் பூதரையும் கொன்று சுத்தோதகக் கடலில் இட்டேன். இனி நீர் வருந்தவேண்டா. நாளை சென்று அறுமுகனை வென்று மாலயனிந்திரரைப் பிடித்துக் கொணர்ந்து தருவேன்" என்றான். சூரபன்மன் கேட்டு உளம் உவந்து மகனைத் தழுவி, "மைந்த! மைந்தன் தந்தைக்குச் செய்யவேண்டியவற்றைச் செய்தாய். நின்னால் நம்குலம் உயர்ந்தது. இனி ஒரு குறையுமில்லை. நாளை முருகனை வென்று பிரமாதி தேவரைப் பிடித்து வருதி" என்று கூறி, புதிய அணிகலன்களை அணிந்து வாழ்த்தியனுப்பினான். பானுகோபன் இருக்கை சேர்ந்தான்.

வீரவாகுதேவர் முதலியோர் நன்னீர்க் கடலில் வீழ்த்தியதைக் கண்டு தேவர் பதைத்தோடினர். நாரதர் ஓடி முருகவேளைத் தொழுது நிகழ்ந்தவற்றை விண்ணப்பித்தார். தேவரும் சொல்லி முறையிட்டார்கள். முருகப் பெருமான் தமது வேற்படையை நோக்கி, நீ நன்னீர்க் கடலிற் போய், மாயப்படையை அழித்து, வீரவாகு முதலியோருடைய மாயத்தை யழித்து, அவர்களை இங்கு தருதி; செல்லுதி" என்று பணித்து விடுத்தருளினார். வேற்படை ஆயிரகோடி சூரிய ஒளிபோல் சென்றது.

பொறுப்பர்; கணவன் மற்றொரு பெண்ணை நேசிக்கப் பொறுக்கார். பொறுக்கினும் தாமே அதனைக் கூட்டுவிக்கார். நளாயனியின் மனத்தை இந்த வகையில் ஆராயவேண்டும்'' என்று எண்ணினார்.

“பெண்ணரசே! விருப்பு வெறுப்பு தவஞ்செய்பவர்க்கு இருக்கக்கூடாது. இதுகாறும் அப்படி யிருந்த என்மனம், இன்று பொது மகளிர் தெருவழியே என்னை நீ எடுத்துக்கொண்டுவந்த போது, அத்தெருக்கோடியில் நின்று, நம்மைக் கூர்ந்து கவனித்து கைகுவித்து வணங்கி நின்ற பெண்மணியைக் காதலிக்கின்றது. அவளை எனக்கு ஒரு வேளை மனைவியாக்கி வைப்பது நின்கடன்'' என்றார். கணவனுடைய சொற்களைகேட்ட கற்பரசி அசையா மனத்துடன், கணவனைத் தொழுது தாங்கள் விரும்பியவள் பொது மகளேயாதலால் அவளை உமக்கு நட்புசெய்து வைப்பேன்'' என்று கூறினாள். மறுநாள் வைகறையில் நளாயனி யெழுந்து கணவனை வணங்கி விடை பெற்றுக்கொண்டு, பதுமை வீட்டை யடைந்து அவள் வாயில் முற்றத்தை மெழுகி, கண்டார் கண்கவரும் கவினுடைய ஒரு கோலத்தை யிட்டுக் கணவனிடம் வந்தனள்.

பதுமையின் வீட்டுப்பணிப் பெண்கள் காலையிலெழுந்து முற்றத்திற்கு வந்து கோலத்தின் பேரழகைக் கண்டு வியந்து, பதுமையினிடம் சென்று கூறினார்கள். பதுமை துணுக்குற்று எழுந்து வந்து கோலத்தைக்கண்டாள். அதன் அதிசயற்புதத்தை நோக்கித் திகைத்தாள். அக்கோலத்தில், முன்னாள் கூடையிற் கண்ட முனிவர் எதிரேயிருந்த பதுமையாகிய தன்வடிவத்துடன் பேசவும், அம்முனிவரின் மனைவி காற் பெருவிரலை நோக்கிப் பக்கத்தில் நிற்கவும் கண்டாள். கனவோ என்று கலங்கினாள். அக்கோலத்தைக் காணப்பலர் கூடினர். பகைவர் செய்த குறும்போ என்று ஐயுற்றாள். இவ்வழகிய கோலமிட்டவர் பெருந்தகவும் சில மிக்கவருமாயிருக்கவேண்டும் என்று எண்ணி அக்கோலத்தின் முன் வீழ்ந்து பணிந்து உள்ளே சென்றாள், “கோலமிட்ட குணசீலரைக் காண்பது எவ்வாறு?'' என்று ஏங்கினாள். உண்ணாதும் பகலும் இரவும் உறங்காதும் நோன்பிருந்தாள். அன்றிரவு கண் விழித்து முற்றத்தைக் காவல் செய்தாள்.

நளாயனி வைகறை யெழுந்து முன்னாட்போலவே பதுமை வீட்டின் முற்றத்தை மெழுகினாள். உடனே பதுமை சென்று நளாயனியின் திருவடியைத் தொழுது, "என்னையாளவந்த அன்னையே! நின் திருவடித்துகளுக்கும் நிகராகாத நாயேனுடைய வீட்டை மெழுகிக் கோலமிடும் கருத்துயாது? கற்பரசியே! என்னைப் பாவத்திற்காளாக்கலாமா? நான் உனது திருவடித்தொழும்பு செய்வதற்குந் தகுதி யற்றவளாயிற்றே? பாவஞ் செய்து பாத்தையர் மரபிற் பிறந்தேன்;" இந்தக் கடனை எப்படி நான் கழிப்பேன்?" என்றாள். நளாயனி, அம்மா! என் கணவன் பொருட்டு இத்தொண்டு செய்வேனாயினேன். என் விருப்பத்தை நிறைவேற்றுதியோ?" என்றாள். பதுமை, "தாயே! என் உடல் பொருள் உயிர் மூன்றும்உன்னுடையவே. எதை எப்படி வேண்டுமாயினும் பயன்படுத்திக்கொள்" என்றாள். நளாயனி, "உத்தமியே! அது உனக்கு உரிமை யுடையது; உயிரினுஞ் சிறந்தது. உனக்கு அதை மறுக்கவும் உரிமையுண்டு. ஆராய்ந்து சொல்" என்றாள்.

பதுமை, "கற்புத்தெய்வமே! நான் பாவஞ்செய்து பாத்தையர் மரபிற் பிறந்தேன். ஒரு கணவனுடன் கற்பொழுக்கத்தில் நிற்க விரும்பியுளேன். என் குலத்தொழிலை வெறுத்து நலத்தை நாடியுளேன். ஆதலால், தங்களுடைய பதியை யான் ஏற்றுக்கொள்ளுகின்றேன். இன்றே அவரை அழைத்துவரலாம்" என்றாள். நளாயனி, "மாதரசே! என்கணவருக்குத் தொழுநோய்; முடைநாற்றம் வீசும்; அதனைப் பொறுத்திருக்கவேண்டும்" என்றாள். பதுமை, "தாயே! நான் உனது உடன்பிறந்தாள். உனக்கு உள்ள இன்பதுன்பங்களில் எனக்கும் பங்குண்டு. நீ எவ்வாறு அவரிடம் அன்பு செய்கின்றனையோ அவ்வாறு யானும் செய்வேன். அவரை இப்பொழுதே அழைத்துவா" என்றாள். நளாயனி உள்ளம் உவந்து கணவனிடம் வந்தாள். பதுமை இசைந்ததைக் கூறி கணவனைக் கூடையில் எடுத்துவைத்துக் கொண்டு பதுமை வீடு சேர்ந்தாள். முனிவர் நளாயனியின் தூய்மையான அன்புக்குப் பெரிதும் வியந்தார்.

பதுமை நளாயனியையும் முனிவரையும் எதிர்கொண்டு முகமலர்ந்து இன்சொல்கூறி நல்லுணவு தந்து உபசரித்தனள். யாழிசைமீட்டி கல்லும் உருகப்பாடி நளாயனியையும் முனிவரையும்

மகிழ்வித்தாள். இரவு வந்தபின் பள்ளியறையை யலங்கரித்து முனிவரை யிருத்தி இன்னிசையுடன் பாடினாள். நளாயனி வேறொரு தனியிடத்தில் இருந்தாள். பதுமை முனிவர் திருவடியை வருடவந்தாள். முனிவர் "மாதே! என்னைத் தீண்டாதே; நான் காமவெறி கொண்டவனன்று; ஐம்புலன்களையும் வென்ற அருந்தவன். நளாயனியைச் சோதிக்கக் கருதியிங்கு வந்தேன். அவள் ஒரு கற்புத் தெய்வம். குலமகளிர் ஒழுக்கம் உன்பால் இருக்கக்கண்டு மகிழ்கின்றேன். உனக்கு வேண்டிய வரத்தைப் பெற்றுக்கொள்" என்றார். பதுமை, "மாதவரே! மறுபிறப்பிலாவது அடியேன் சிறந்த பதியை மணந்து உயர்ந்த வாழ்வில் வாழ அருள்புரிவீர்" என்றாள். முனிவர் அந்த வரத்தை அவளுக்கு வழங்கி, அந்நள்ளிரவிலேயே அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டார். நளாயனி கணவனைச் சுமந்து, அவருடைய தூயதன்மையைக் கருதி மகிழ்ந்து செல்வாளாயினாள். பதுமை என்ற அவள் சில நாள் சிவாலயத் தொண்டுசெய்து இறுதியில் உடலைவிட்டு, துவாரகையில் கண்ணபிரானுக்குத் தங்கையாகப் பிறந்து, சுபத்திரையென்ற நாமத்தைப் பெற்று பாண்டவர்கள் ஐவரிற் சிறந்த அருச்சுனப் பெருமானை மணந்து இன்புறும் பேறு பெறுவாளாயினாள்.

இந்நிகழ்ச்சிக்கு முன்னாளிரவு கள்ளர்கள் அந்நாட்டரசன் வீட்டிற் செம்பொன்களைக் களவு செய்துகொண்டு ஓடினர். காவலர் அறிந்து தொடர்ந்தனர். காவலர்க்குப் பயந்த கள்ளர்கள் வழியில் தவஞ் செய்துகொண்டிருந்த மாண்டவ்வியர் ஆச்சிரமத்திற் புகுந்து அவர் பக்கத்தில் மூட்டைகளை வைத்துவிட்டு மூலைகளில் பதுங்கிக்கொண்டனர். காவலர் பர்னசாலைக்குள் நுழைந்து மாண்டவியரையும் பொருள்களையும் கள்ளர்களையும் கைப்பற்றிக்கொண்டு மறுநாள் காலை அரசன் முன்விட்டு, "மன்னர் மன்ன! இவர்கள் கள்ளர்கள்; இவன் இவர்கள் தலைவன்; இது இவர்கள் திருடியபொருள்; எங்களைக்கண்டு இவன் இப்படி பூச்சாண்டி வேடமிட்டு தவசிபோல நடிக்கின்றான்; இவன்தான் முழுத்திருடன்" என்றார்கள். அரசன் முனிவரை "நடந்தது என்ன?" என்று வினவினான். மாண்டவியர் மௌனமாக நின்றார். அரசன் கள்வ

ரைச் சிரச்சேதமும், மாண்டவியரைக் கழுவேற்றமும் செய்யப் பணித்தான். காவலர் அங்ஙனமே செய்தனர். தவளே பிடமிருந்து தோன்றி அம்மாண்டவியர் இளமையில் தும்பிகளே வால்கிள்ளி முள் செருகி விளையாடிய தீவினையால் இத்துன்பத்தையடைந்து கழுவில் தொங்கிக்கொண்டிருந்தார். இருளினால் நளாயனி வழிதவறி அவ்வழியே சென்றனள். தலையிலிருந்த கூடை மாண்டவியர் கால்களிற் பட்டுவிட்டது. அதனால் அவருக்குத் துன்பமிக்குற்றது. மாண்டவியருக்கு சிறிது சினம்வந்து "கற்புடையோமெனத் தருக்குற்றேகும் தையலே! பொழுது விடிந்ததும் நின் மங்கலநாண் நீங்கக்கடவது" என்று சபித்தனர். அதனைக்கேட்ட நளாயனி திடுக்கிட்டு, "அவ்வாறுயின் பொழுது விடியாமலிருக்கக்கடவது" என்று பதில் கூறிவிட்டு தனது பர்னசாலைபோய்ச் சேர்ந்தாள்.

இரவு வளர்ந்தது. சூரிய உதயமாகவில்லை. மக்கள் தவிக்கலுற்றார்கள். கோயில்வழிபாடு, ஜபதபங்கள், நித்தியவழிபாடுகள் எல்லாந் தடைபட்டன. குளிர்மிக்கது, செடி கொடிகள் மரங்கள் வெளுத்தன, பசியாலும் குளிராலும் மனிதர்கள் வாடினார்கள். சூரிய ஒளியின்றி எங்கும் ஒரே கலக்கம் உண்டாயிற்று. அயனும் அரியும் அரனும் தத்தம் மனைவியருடன் தங்கள் ஊர்தி மேலூர்ந்து நளாயனியிடம் வந்தனர். தேவர்கள் யாவரும் முனிவரும், சித்தவித்தியாதரும், திசைபாலகரும் அரமகளிரும், இயக்கரும் வந்துகூடினார்கள். மௌத்கல்யர் எல்லோரையுந் தொழுதனர். "எண்ணில்லாத காலந்தவஞ் செய்யினும் இத்துணைத் தேவரையும் ஒருங்கே தெரிசிக்கமுடியாதே? நளாயனியின் கற்பின் பெருமையால் கிடைத்த பெரும்பேறு" என்று எண்ணி உள்ளம் பூரித்தனர். கலைமகளும் அலைமகளும் மலைமகளும் நளாயனியைத் தழுவி வாழ்த்தினார்கள். நளாயனி மும்மூர்த்திகளையும் ஏனைய தேவர்களை இறைஞ்சிப் பூசித்தனள்.

இதற்குள் இந்திரன் சாளுவநாட்டு மன்னனுக்கு நிகழ்ந்ததைக் கூறி மாண்டவியரைக் கழுவினின்று விடுவித்து அங்கே அழைத்துவந்தான். சிவபெருமான் மாண்டவியரை நோக்கி, "அன்பனே! உன்னைச் சாளுவமன்னன் ஆராயாது கழுவிலிட்டது

போல் நீயும் கற்பரசியாய நளாயனிக்கு ஆராயாது சாபமளித்தனை. அது உலகிற்கே பெருங் கேடாய்விட்டது. சாபத்தை நீக்கி அம்மையை வாழ்த்துதி” என்றார். உடனே மாண்டவியர் நளாயனியைப் பார்த்து “கற்பரசியே! நித்திய சுமங்கலியாக விளங்குவாய்” என்று வாழ்த்தினர். நளாயனியும், “பொழுது விடிக” என்றாள். கதிரவன் உதித்தான். எங்கும் ஒளி மயமாயிற்று.

பின், சிவமூர்த்தி மௌத்கல்யரை நோக்கி, “இத்தொழு நோய்க்குக் காரணமான அந்த அரச கோலத்தைக் காட்டு” என்று பணித்தருளலும், மௌத்கலியர் அவ்வடிவுடன் தோன்றினர். அதைக்கண்ட நளாயனி திடுக்கிட்டு, “அந்தோ என் கணவனுக்கு நானே தீங்கிழைத்துவிட்டேனே” என்று வருந்தினள். சிவபெருமான் “அம்மா! நின்கணவனாகிய இவ்வரசனுக்கிட்ட தொழு நோயை விலக்கு” என்று பணித்தருளினர். நளாயனி “தொழுநோயே! என் கணவனைவிட்டு விரைவில் விலகுவாயாக” என்றாள், உடனே நோய் நீங்கியது. பிறகு சிவபெருமான், மௌத்கல்யரை கன்னிமாடத்திற் காட்டியவுருவுடன் வரச்செய்து, இவ்வடிவுடன் நளாயனியோடு இல்லறவாழ்வில் இன்புற்று பன்னெடுங்காலம் வாழுமாறு பணித்தருளினர். மௌத்கல்யர் நூறு கோடி மன்மதவடிவுடன் திகழ்ந்து நளாயனியுடன் மூவரையுந் தேவரையும் வலம் வந்துவணங்கினர். அவர்கள் மௌத்கல்யரையும் நளாயனியையும் வாழ்த்திவிட்டுத் தத்தம் இருக்கை ஏகினர்கள். மௌத்கல்யர் நளாயனி கருத்தொருமித்து பூவும் மணமும் போலப் பொருந்தி இன்பவாழ்வில் திளைத்து நீடுவாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

முற்றிற்று.



ஓம் குஹாய நம:

சீகாளத்தி

யாதவ மஹாராஜன் கதை

(சீகாளத்தி ஆலயங் கட்டப்பட்ட வரலாறு)

உயர்திரு இராவ் சாஹிப் வ. சு. செங்கல்வராயப் பிள்ளை, M. A.
சென்னை.

முன்னொரு காலத்தில் தொண்டை நாட்டில் நாராயணபுரம் என்னும் தலைநகரில் யாதவ மஹாராஜன் என்பவன் அரசாட்சி செய்துவந்தான். புகழும் பத்தியும் நிறைந்த இம் மன்னனை ஆட்கொள நினைந்து சிவபிரான் சங்கம வேடம் பூண்டு, பார்வதி தேவியைவிட்டுப் பிரிந்து, திருநீறு தமது மெய்யெலாம் விளங்க, ருத்ராக்ஷமணி தமது தேகத்திற் பொலிய, வீரசைவர்கள் அணியும் வகையில் சிவலிங்க தாரணம் முதலிய சின்னங்கள் திகழ, அந்த நாராயணபுரம் என்னும் ஊருக்குள் பலியேற்ப வருவார்போல நுழைந்தனர். நுழைந்து தெருத் தெருவாய்ச் சென்றனர். இவரது மெய்ப் பொலிவைக்கண்ட மங்கையர் யாவரும் நிலைதடுமாறினர். அவர் திருவடிகளைத் தமது கண்மலர்களால் அருச்சனை செய்வதுபோல அத்திருவடியழகைப் பார்த்துப் பார்த்து மங்கையர் பிரமித்து நின்றனர். இவர் மானிடர் அன்று என்றார் சிலர். அழகிற் சிறந்த கந்தவேளே இந்த ரூபம் என்றார் சிலர், யாவருக்கும் மால்தரும் திருமாலே இவர் என்றார் சிலர். இவர் நமது கனவிடைத் தோன்றி இனி யொருநாள் இவ்வாறு காட்சி யளிப்பரோ-எனக்கவலை கொண்டார் சிலர். எமது கண்ணையும் காத்தையும் கவர்ந்து செல்கின்றனரே-என்றார் சிலர். எமது உள்ளங்கவர் கள்வர் இந்த மாய சங்கமர்-என்றார் சிலர். இவ்வண்ணம் அவர் செல்லும்பொழுது, யாதவ ராஜனுக்கு உண்கலங்களாம் பொற்கலன்களைக் கழுவி உணவுக்கு வைக்கும் பணிப்பெண்ணாகிய ஒரு மாது சைவம் விளங்கும் அவர் மேனிப் பொலிவிற் பத்தி நிரம்பி ஈடுபட்டவளாய் அவரிடஞ் சென்று அவர் திருவடியில் விழுந்து வணங்கி, எழுந்து, கைகூப்பி அவரை நோக்கி,

"அருவினைத் தொடர் அறுத்த அடிகளே! நும் அடிகளைக் கண்டமாத்திரம் இவ்வுடலை எடுத்த பெரும்பயனைப் பெற்றவளா

யினேன். கருணை செய்து அடிச்சியேன் பொருட்டு இறங்கித் தங்கள் திருவடித் தலங்கள் நோவ என் மனைக்கண் போர்ந்து, திருவமுதுகொண்டு தாங்கள் உண்ட மிகுதியை உண்ண எனக்கு அளித்து எனது வல்வினைத் தொடக்கை அறுத்தருளவேண்டும், பெருமானே! எனக் கூறித் தாழ்ந்து வணங்கினாள். இதைக்கேட்ட அண்ணல் அருட்பொலி முகமுடன் அவளை நோக்கி.

"அன்பே வடிவு கொண்டன்ன நங்கையே! அடியார் பத்தியில் நின்னை யொப்பார் இல்லை. உனக்கு நான் சொல்லுவது ஒன்று உண்டு," என்றார். தையலும் "சுவாமி! தயைசெய்து திருவாய் மலர்ந்தருளவேண்டும்" எனப் பிரார்த்தித்தனள், சங்கமர் "பொற்றொடி மயிலே! நான் இப்போது காம பாணத்தால் வருந்துகின்றேன். எனது மோக தாபத்தை உன்னிடம் நான் சிறிதேனும் அஞ்சுதலின்றித் தீர்த்துக்கொள்ள நீ உடன்பட்டால் உன்னுடன் வருவேன்" என்றார். இதைக்கேட்ட மங்கையும் புன்னகை செய்து 'அழியுந் தன்மை வாய்ந்த இப்பொள்ளல் யாக்கையைச் சேர அடிகள் திருவுளங்கொண்டது யான் பல பிறவிகளிற் செய்த தவப்பேறாகும். தாங்கள் குறித்தவாறே ஆகுக" எனக் கூறிச் சங்கமரைக் கொண்டுவந்து, மனைப்புகுந்து, குலாவுபாதம் விளக்கி மண்டு காதலின் ஆதனத்திடை வைத்து அருச்சனை செய்து பின் உண்டி நாலு விதத்தில், அறுசுவைத் திறத்தினில் பொற்கலங்களில் அளித்து. சந்தனம், வெற்றிலை பாக்கு முதலிய தந்து பிரியத்துடன் அருகில் நின்றாள். கண்ணுதல் காந்த கள்வனும் சங்கமரும் காமம் பெருகிய குறிப்பில் அவளுடன் சல்லாபஞ் செய்தனர். இத்துறையில் நெஞ்சம் பதிந்ததால் நங்கை யாதவராஜனுக்குச் செய்யவேண்டிய பணிகளை மறந்தனள். அரசனும் புனலாடி நீறுபூசி உண்ண வந்தனன், உண்கலன்கள் ஒன்றும் வைக்காதிருப்பதைக்கண்டு பணிப்பெண் தன் வேலைக்கு வாராமையை உணர்ந்து கடுஞ்சினங்கொண்டனன். அரசனிடம் இருந்த ஏவலாளர்கள் இவள் வீட்டுக்கு ஒடிவர்து இவளைச் சினத்தோடு கழறிக் கூவக் காமலீலையில் இருந்த இவள் திடுக்குற்றெழுந்து அலங்கோலமாய் இருந்த ஆடையைத் திருத்தியும், கூந்தலைச் செருகியும், தாம்பூலச் செவ்வாயை ஆடையால் துடைத்தும், "புறப்படு, புறப்படு" என்று முடுக்கிக்கொண்டே நின்ற ஏவலாளர்களுக்கு "இதோ வந்துவிட்டேன், இதோ வந்துவிட்டேன்" என நயமொழிகளை இடையிடையே கூறிக்கொண்டும் சங்கமப்பிரானை நோக்கி "சுவாமி! சற்று இங்கு இருங்கோள், எங்கும் போகவேண்டாம், இதோ வந்துவிடுகிறேன்" எனச் சொல்லி விடைபெற்று விரைவில் வெளிவந்தாள்.

(தொடரும்)